அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in



அ.எண்.220/2015
தேதி. 10.9.2015

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# மாபெரும் சாதனை
# ச.ம.க.தலைவர் பெருமிதம் !

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் தமிழகத்தின் வளர்ச்சிக்காக, முதல்கட்டமாக 2,42,000 கோடி முதலீடு செய்வதற்கு தொழில் அதிபர்கள் மூலம் ஒப்பந்தங்கள் நிறைவேற்றியிருப்பது அளப்பறியா மகிழ்ச்சியை அளித்துள்ளது

தமிழகத்தின் பெரும் தொழில்கள் எதையும் கண்டிராத தென்மாவட்டங்களில் மட்டும்70,000 கோடிக்குமேல் பல்வேறு பிரிவுகளில், தொழில் தொடங்க இருப்பது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.
ஒரு லட்சம் கோடி திரட்ட முடியுமா? என்று எதிர்க்கட்சியினர் சந்தேகங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்த நிலையில், எதிர்பார்த்த இலக்கைவிட இரண்டுமடங்காக 2,42,000 கோடி திரட்டியிருப்பது மிகப்பெரிய சாதனை ஆகும்.

மேலும், அடுத்து இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறும் என்ற அறிவிப்புடன், 2017ல் அடுத்த மாநாடு நடக்க இருப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இதன் மூலம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அறிவித்த தமிழ்நாடு 2023 தொலைநோக்குத் திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்பது உறுதியாகி உள்ளது. உலகின் பல்வேறு முக்கிய நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிற நிலையில் இந்த வியத்தகு சாதனையை படைத்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மனதார பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்